# சுவடு-03



## கிளி/பூநகரி மத்திய கல்லூரி
## -2014-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்-03

கிளி/பூநகரி மத்திய கல்லூரி

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் உயர்தர மாணவர் மன்றம் இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எழுதி பிரியாவிடை பெறும் மாணவர்களின் நினைவுகளைத் தாங்கிய சுவடு-3 நினைவுச் சுவடினை வெளியிடுவதையிட்டு பெரு மகிழச்சியடைகின்றேன்.

பள்ளி வாழ்வென்பது நம் வாழ்வில் மறக்க முடியாத நினைவுகளின் தொகுப்பாகும் மாணவ பருவத்தில் நாம் கற்றவை பெற்றவை யாவும் நம் வாழ்வைத் தீட்டும் தூரிகைகளாகும் அதற்கு உயிர் ஊட்டுபவை நட்பாகிய வண்ணங்களாகும். பாடசாலை வாழ்வில் வலம் வந்த நண்பர்கள் ஒருவெருக்கொருவர் வாழ்வை உயர்த்தும் ஏணிகளாக துன்பத்தில் தோள் கொடுத்து தாங்கும் தோழர்களாக வாழ வேண்டும்.

இவ் வருடம் உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவ செல்வங்கள் சிறந்த முறையில் பரீட்சை எழுதி உயர்ந்த பெறுபேறுகளை பெற்று மேலும் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்று சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

வருடா வருடம் இவ் நினைவுப் பேழையினை வெளியிட்டுவரும் உயர்தர மாணவர் மன்றத்திற்கும் எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**20.06.2014**

**இ.பாலச்சந்திரன்.**
அதிபர்,
கிளி/பூநகரி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாலசிங்கம் கிர்சிகா**

நெற்புலவு,
பூநகரி.

உ ள்ளத்திலேசிறந்தவளாம் - இவள்
படிப்பினில் உ யர்ந்தவளாம்
அடக்கத்தின் அதிபதியாம் - கிருசி
மௌனத்தின் வித்தகியாம்

**சந்திரலிங்கம் நிசோதனா**

நெடுங்குளம்,

பூநகரி.



அமைதியின் பிறப்பிடமாம் நிசோதனா—வகுப்பில்
பூகம்பத்தின் ஆரம்பமும் நீர்தான்
உ ம் சிரிப்பை இரசித்திடஓர் கூட்டம்
மொத்தத்தில் இவள் ஒருநாடகமயிலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பத்மநாதன் பிரசாத்**

அரசபுரம்,

பூநகரி.

சிங்கநடையில் பள்ளிவந்திடுவான்

Logicஇன் முதல்வனாம் - பிரசாத்


ஆசிரியர்களின் மனங்கவர் புதல்வனாம் - இவன்

சிரிப்பின் சிகரமாய்விளங்கிடுவான்

**இராசகுணநாதன் ராகவன்**

நெற்புலவு,

பூநகரி.



அழகாய் பேசி அன்பாய் திரிந்திடும் இராகவனே senior

ஆக இருந்தாலும் அனைவரையும் சிலிர்க்கவைப்பாய்

Late ஆக பள்ளிவந்தாலும் latters ஆக கதைத்திடுவாய்

நெற்புலவின் Hero என்ற நினைப்போ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***முருகேசு டிலக்சன்***

அரசபுரம்,

பூநகரி.

*விக்கிவிக்கி சிரித்திடுவான் - இவன்*

*அரசபுரத்திலிருந்து வந்தாலும் ஆழமாகச் சிந்திப்பான்*

*சங்கீதத்தில் இவன் ஒரு வித்துவானாம் டிலக்சன்*

*வருங்கால யுவன் சங்கர் ராஜாவாம்!*

**செந்தில்குமார் துர்க்கா**

நெடுங்குளம்,

பூநகரி.



*தாராவின் நடையோ உன் நடை*

*தாராவிடமோ நடை பயின்றாய் - துர்க்கா*

*உன்தன் அழகின் இரகசியம் தான் என்னமோ*

*White இன் மாயம் தான் என்னவோ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***உதயகுமார் நிறோஜன்***

பள்ளிக்குடா,


பூநகரி.

*கலைக்கோர் அரசாம் - நிறோ*

*கலைகளின் பிறப்பிடமாம்*

*S.P இன் தம்பியோ - இவன்*

*பாடல்களின் அதிபதியோ*



**கருணாமூர்த்தி துலக்சன்**

*நெற்புலவு,*

*பூநகரி.*

*பள்ளிக்குத் தவறாமல் வந்திடுவான் - துலக்சன்*

*அதன் இரகசியம் தான் என்னவோ?*

*உம் தெத்திப் பல் தான் உமக்குஅழகோ*

*உமக்கு சாருகான் என்ற நினைப்போ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சௌந்தரநாயகம் அஜந்தன்**

கௌதாரிமுனை,

பூநகரி.

*தூரநோக்கில் பேருந்தில் பயணம் செய்வான் - அயன்*

*கிறிஸ்தவ நாகரீகத்தின் புதல்வனாம்*

*அமைதியின் அரசே— உன் மனதில் என்ன*

*மன்மதன் என்றநினைப்போ?*

**தம்பையா மகிந்தன்**

நெற்புலவு,

பூநகரி.



*சிரிப்பிலே வசீகரித்திடுவான் - இவன்*

*சிந்தனையில் அரிஸ்டோட்டில்*

*நாகரீகத்தின் தலைவனாம் - இவன்*

*நக்கலின் நாயகனாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இராமநாதன் குவேனி**

*வாடியடி,*


*பூநகரி.*

*அமைதியாய் திரிந்தாலும் அட்டகாசமாய் விளங்கிடுவாள்*
*உன் சிரிப்போ தமயந்தியைப் போன்றது*
*சில நாட்களாய் உம்மில் தெரிகிறது மாற்றம்*
*அதனால் நல்லது நடப்பது திண்ணம்!*

**கணேசலிங்கம் கஜீபன்**

பள்ளிக்குடா,

பூநகரி.



*பள்ளி மணி அடிக்க வாசலில் வரும் கஜீவா*
*கண்டவுடன் சிரித்திடுவான் - இவன்*
*கல கலவெனக் கதைத்திடுவான்*
*நித்திரையில் இவன் ஒரு கும்பகர்ணன்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரான்சிஸ் றாகுலன்**

முழங்காவில்,

பூநகரி.

*படிப்பினில் கன்னியமாய் விளங்கிடுவான்*

*பூநகரியின் வருங்காலEngineer*

*கணிதத்தில் கதிரோட்டமாய் - இவன்*

*கலக்கிடும் மர்மமென்ன*

**ரவிச்சந்திரன் விதுஜன்**

முழங்காவில்,

பூநகரி.



*அமைதியாய் வந்து அட்டகாசமாய் திரிந்து*

*அனைவரையும் கலாய்க்கும் புன்னகை மன்னனே*

*கிறிக்கற்றில் இலங்கையின் இரகசினோ விதுஜன்*

*இல்லை இலங்கையின் வீரனென்ற நினைப்போ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமிர்தநாதன் டிலானி**

தம்பிராய்,

பூநகரி.

*கன்னி மரியாளாய் விளங்கிடுவாள்*

*குழந்தைகளின் பாசக்குயிலாம் - டிலானி*

*சபையோர் முன் கதைக்கமாட்டாள்*

*சகபாடிகளை கலாய்க்கமாட்டாள்*

**கிருபாகரன் கிருசாந்தினி**

விநாசியோடை,

பூநகரி.



*வேகமாய் நடந்தாலும் அழகாய் நடந்திடுவாள்*

*மயிலிடமாநடைபயின்றாய் கிருசாந்தி*

*தூரத்திலிருந்து வந்தாலும் - உன்*

*பார்வையில் ஓர் தென்றல்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவகுருநாதன் கஜிந்தா**

வில்லடி,

பூநகரி.

*இவள் நடையேஅன்னநடை—ஆனாலும்*

*துள்ளித் துள்ளித் திரிந்திடுவாள் - கஜி*

*கடமையும் கண்ணியமும் இவளின் கண்களாம்*

*மொத்தத்தில் இவள் ஒரு நடன தேவதையாம்*



**பஞ்சலிங்கம் அநிதா**

செட்டியகுறிச்சி,

பூநகரி.

*சிரிக்காமல் கதைகள் சொல்லி - இவள்*

*அனைவரையும் நம்பவைத்திடுவாள்*

*நட்பின் நாயகியே—அநிதா*

*இவள் அன்பின் சிகரமாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சாம்பசிவம் துவாரகா**

நெற்புலவு,

பூநகரி.

*கிறுக்காய் கதைசொல்லிகில்லியாய் எழுந்திடுவாய்*

*அதிகாலையில் எழுந்துஅதிவேகமாய் வந்திடுவாள்*

*பக்குவமாய் பேசிடுவாள் - இவள்*

*பக்குவத்தின் அரசியாம்*

**மரியருள்ராஜா சுவர்ணா**

மட்டுவில் நாடுமேற்கு,

பூநகரி.



*குழந்தையாய் பேசிடுவாள் - இவள்*

*அனைவரையும் பாடிமயக்கிடுவாள்*

*சங்கீதத்தின் சின்னக்குயிலே—சுவர்ணா*

*உமக்குசித்திராஎன்றநினைப்போ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செல்வரத்தினம் சிந்துஜா**

4ம் கட்டை,

பூநகரி.

*அழகாய் பள்ளிவந்திடுவாள்*

*ஆனந்தமாய் குதூகலித்திடுவாள்*

*சிந்தனையில் சிறந்திடுவாள் - சிந்து*

*சின்னமுத்தாய் துலங்கிடுவாள்*

**கணேசமூர்த்தி வேணுகா**

வாடியடி,

பூநகரி.



*அமைதியின் பிறப்பிடமாம் - இவளின்*

*இடக்கையின் இரகசியம் தான் என்னவோ?*

*கலக்கலாய் இருக்கும் வேணுவே*

*சிலநாட்களாய் உமக்குளென்னகலக்கம்?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயகுமார் சரண்யா

நெடுங்குளம்,

பூநகரி.

*சாந்தமாய் திரிந்திடுவாள் - இவள்*

*படிப்பிலும் மிளிர்ந்திடுவாள்*

*புவிக்கோர் அரசியாம் - சரணி*

*உலக புவியியலின் தலைவியாம்*

**தியாகேஸ்வரன் ரஞ்சித்**

கரிக்கோட்டுக்குளம்,

பூநகரி.



*மாயம் செய்திடும் உன் முழிப்பார்வை*

*காயம் செய்திடும் உன் வார்த்தை*

*விவேக்கின் சகோதரனாம் - ரஞ்சித்*

*பள்ளியின் முதல்வனாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சரவணமுத்து சஞ்சீதன்**

நெற்புலவு,

பூநகரி.

*பள்ளியின் புள்ளிமானாம் சஞ்சீ*

*பூநகரியின் சிறந்த lawyer ஆம்*

*சட்டம் தான் இவரின் இலட்சியமோ?*

*அமைதிதான் உந்தன் சிந்தனையா?*

**தங்கத்துரை சுதர்சன்**

தெளிகரை,

பூநகரி.



*அழகோ அழகு உன்நடை*

*அசத்தும் நடையில் என்னதான் இரகசியமோ?*

*சாதுவாய் இருந்தாலும் கேலியாய் பேசிடும் சுதர்சனே*

*மனதுக்குள் Super star என்றநினைப்போ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மரியதாஸ் மேரிஜெஸ்ரீனா**

4ம் கட்டை,

பூநகரி.

*கிறிஸ்தவத்தின் புத்திரியாம் - ஜெஸ்ரா*

*சிரிப்பினில் புன்னகைஅரசியாம்*

*கதையினில் கோவைசர்லாவாம்*

*styleஇல் நாயகியாம்*

**இலட்சுமனன் யாழினி**

மட்டுவில்நாடுமேற்கு,

பூநகரி.



*அரைகுறையாய் English தெரிந்தாலும்*


*அதைஅழகாய் பேசிடும் - யாழியே*

*படிப்பிலே நீ ஓர் அற்புதமாம்*

*பண்பிலே இவள் ஓர் சித்திரமாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆறுமுகம் சதீஸ்வரன்**

4ம் கட்டை,

பூநகரி.

*ஒலிம்பிக்கின் வீரனாம் சதீஸ்- நீ*

*சந்தனப்பொட்டுவைப்பதுஉம் நேர்த்தியா?*

*வர்த்தகத்தின் வர்ணனேசதீஸ்*

*பள்ளியின் விண்ணனே*

**பாலசுப்பிரமணியம் துவாரபாலகி**

பள்ளிக்குடா,

பூநகரி.



*அழகாய் கவி பாடிடும் கவியரசியே— உன்*

*கண்களில் கண்ணகியின் பார்வையோ*

*அமைதியாய் இருந்திடுவாள் பாலகி—நீ*

*வர்த்தகத்தின் சிறப்பிடமாமே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று வாழ்க!

ஆலமரமாய் உயர்ந்த நம் கல்லூரியின்
விழுதுகளாய் உயரும் மாணவர்களே!
கிளைபரப்பி நிழல் கொடுக்கும்
நம்பள்ளிக்கு தோள் கொடுப்பீர்!

பாலகராய் பள்ளியினில் நுழைந்தீர்!
பாரும் போற்ற உயர்வீர்!
பதின்மூன்று ஆண்டுகள் கற்றுக்களித்தீர்!
இன்வரும் காலமும் உமதே!சிறப்பீர்!

கல்வியில் உயர்ந்தீர்!
கலைகளில் தேர்ந்தீர்!
எண்ணிய முடிப்பீர்!
எதிலும் ஜெயிப்பீர்!

திண்ணிய செயலால்
தெளிந்த நல் அறிவால்
புதுயுகம் படைப்பீர்!
வாழ்வாங்கு வாழ்வீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகள் பெற்றிடுவீர்!

பூநகரி மத்தியின் மைத்தர்கள் தாம்
எட்டுத் திக்கும் கிளை பரப்பி
தம் புகழ் நாட்டி எம் புகழ் காத்து
நாட்டுக்கு நன்று செய்வீர்!

உயர் கலைகள் கற்றுத் தேர்ந்து
மக்கள் துயர்துடைக்கும் நல்லவர்கள் நாமென்று
ஊருக்கு நல்லது செய்தே உயர்நத்தவர் நீரென்று
ஊரவர் புகழ் ஓங்க வாழ்ந்திடுவீர்!

பெற்ற தாயும்,பிறந்த நாடும் ,கற்ற கல்லூரியும் மறவாது
நல்ல செயல் தனை மனதில் கொண்டு
தம் வாழ்நாழ் முழுவதும் நலமுடன் வாழ்ந்து
நற்பணி செய்து வாழ வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்வாங்காதீர்கள்,விவாதித்துக் கொண்டும் இருக்காதீர்கள் நீங்கள் செய்ய ஆரம்பித்ததை செய்து முடியுங்கள் மற்றவர்கள் குலைத்துக் கொண்டிருக்கட்டும்"

*Neli mek kiling*

Designed by: ICT Unit,KN/PCC www.poonagarycc.sch.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org